0 3 MAR 2021

கருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு இரா.சுதாகர், த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு எஸ்.இராஜேந்திரன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை(2டி) எண்.12

நாள்: 18.02.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, மாசி 6

25196

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1)துறை, நாள் 23.01.2020.
3. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை கடித எண். எஸ்12(2)/ 47295/ 2019, நாள் 30.09.2020.

-----

ஆணை:-

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித்துறையைச் சார்ந்த தொழில்நுட்ப கல்வி உபகோட்டம், செங்கல்பட்டு அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு எஸ்.இராஜேந்திரன் கடந்த 02.02.2007 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ மகனான திரு இரா.சுதாகர் என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 24.10.2019 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்து முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அவர் அப்பதவிக்குண்டான குறைந்தபட்ச கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்வில் ஏப்ரல் 1990–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 29.07.1975 ஆகும் என்றும் தெரிவித்து, தனியரின் பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து, தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 24.10.2019 பிற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4. எனவே, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், திரு இரா.சுதாகர் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 24.10.2019 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், தனியர் ஊதிய உயர்வு பெற தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா.எண். 1821/ட்டி.1/2021, நாள் 05.02.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண். 3910/ஜி.1/2021–1, நாள் 10.02.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.மணிவாசன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
திரு இரா.சுதாகர், இளநிலை உதவியாளர்,
(முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5 வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை –18.

<u>நகல்:</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை/
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்